**PANASONIC CARBON INDIA CO. LIMITED**
CIN: L29142TN1982PLC009560
Regd. Office: Pottipati Plaza, 77 (Old No.35)
Nungambakkam High Road, Third Floor,
Nungambakkam,Chennai– 600 034.
Tel: 044-28275216, 044-28275226, Fax: 044-28263010

**April 17, 2018**

**To**
**BSE Limited,**
**Registered Office: Floor 25,**
**PJ Towers, Dalal Street,**
**Mumbai-400001**

**Dear Sir,**

**Ref: BSE Scrip code : 508941**

As required under Regulation 30 read with Schedule III (Part A) (12) of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements), Regulations, 2015. Please find enclosed copy of the advertisement as appeared in News today (English) and Malai Sudar (Tamil) on January 2018.

We request you to kindly take the above information on record.

Thanking you,


Yours faithfully,


**For Panasonic Carbon India Co. Ltd**

P-Maheswari

**P.Maheswari**
**Company Secretary**

**Encl:a/a**





திருவிடந்தையில் நடைபெற்று வரும் ராணுவ கண்காட்சியை பிரதமர் மோடி இன்று தொடங்கி வைத்து வீரர்களின் சாகச நிகழ்ச்சிகளை கண்டுகளித்தார். உடன் கவர்னர் பன்வாரிலால் புரோஹித், முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, மத்திய அமைச்சர்கள் நிர்மலா சீதாராமன், பொன்.ராதாகிருஷ்ணன்ன, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் (படம் 1,2). சாகசங்களை பார்வையிடும் முப்படையை சேர்ந்த அதிகாரிகள் (படம் 3).

### திருவிடந்தை ராணுவ கண்காட்சியில் பொது மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம்

# முப்படை சாகசம்: மோடி பார்த்தார்

## நீர்மூழ்கி கப்பல்கள், பீரங்கி டாங்கிகளின் செயல்பாடுகள் குறித்து வீடியோமூலம் விளக்கம் அளிக்கப்பட்டது


சென்னை,ஏப்.12:

**சென்னையை அடுத்த திருவிடந்தையில் நடைபெற்ற ராணுவ கண்காட்சியை பிரதமர் மோடி திறந்து வைத்து முப்படைகளின் சாசக நிகழ்ச்சிகளையும் கண்டுகளித்தார். போர் கப்பல்கள் மற்றும் ஹெலிகாப்டர்களின் சாகசங்களை கடற்கரையில் இருந்து பொது மக்களும் பார்த்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.**

சென்னையை அடுத்த திருவிடந்தையில் ராணுவ கண்காட்சி 3 நாட்கள் நடைபெற உள்ளது. இந்த கண்காட்சியில் 500க்கும் மேற்பட்ட உள்நாட்டு நிறுவனங்களும், 125 வெளிநாட்டு நிறுவனங்களும் பங்கேற்றுள்ளன. ராணுவ கண்காட்சியை துவக்கி வைப்பதற்காக காலை 6.40 மணியளவில் டெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் பிரதமர் சென்னை விமான நிலையம் வந்தடைந்தார். அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் விழா நடைபெறும் பகுதி அருகே வந்து இறங்கி விழா மேடைக்கு காரில் வருகை தந்தார்.

முன்னதாக சென்னை விமான நிலையத்தில் பிரதமர் மோடியை கவர்னர் பன்வாரிலால் புரோகித், தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் சால்வை அணிவித்தும், பூங்கொத்து அளித்தும் வரவேற்றனர்.

10.15 மணியளவில் விழா மேடைக்கு வருகை தந்த மோடியை அங்கு குழுமியிருந்தவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்து வரவேற்றனர். இதை தொடர்ந்து தமிழ்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. இதன் பின்னர் ராணுவ கண்காட்சியில் இடம் பெற்றுள்ள ராணுவ தளவாடங்கள் குறித்த வீடியோ ஒளிபரப்பப்பட்டது. இந்த வீடியோவில் ஏவுகணைகள், நீர்மூழ்கி கப்பல்கள், பீரங்கி டாங்கிகள் உள்ளிட்டவைகளின் செயல்பாடுகள் குறித்து இந்த வீடியோவில் இடம் பெற்றிருந்தது.



இந்த வீடியோ காட்சிக்கு பின்னர் மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன், முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இதை தொடர்ந்து 10.45 மணியளவில் ராணுவ கண்காட்சியைதுவக்கி வைத்து காலை வணக்கம் என தமிழில் தனது உரையை மோடி பேசத் தொடங்கினார். அவரது பேச்சில் தற்போது ராணுவ துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும், பிற நாடுகளுடன் ஒப்பிட்டும் புள்ளி விவரங்களுடன் பேசினார்.

ராணுவ கண்காட்சியில் இன்று நடைபெற்ற துவக்க விழாவை ஆஸ்திரேலியா, ஜெர்மனி, தென்கொரியா, நைஜிரியா,ஆப்கானிஸ்தான், நேபால் உள்ளிட்ட 35 நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகள் வீடியோ கான்பரன்சிங் மூலம் கண்டு ரசித்தனர்.

இந்த ராணுவ கண்காட்சி துவக்க விழாவுக்கு பின்னர் கடற்கரை மணல் பகுதியில் முப்படைகளின் சாகச நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை அந்த பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சிறப்பு மேடையில் அமர்ந்து பிரதமர் மோடி, தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், மத்திய அமைச்சர்கள் நிர்மலா சீதாராமன், பொன். ராதாகிருஷ்ணன் உள்பட தமிழக அமைச்சர்களும் கண்டுகளித்தனர்.

போரின் போது பயன்படுத்தக்கூடிய போர் விமானங்கள் இயற்கை பேரிடர் ஏற்படும் போது மக்களை எப்படி ஹெலிகாப்டர் மூலம் பாதுகாப்பது என விமானப்படை வீரர்கள் செய்து காட்டினர். அதே போன்று பாராஷூட் மூலம் வீரர்கள் வானில் பறந்தும் ஹெலிகாப்டர்கள் தலைகீழாக குட்டிக்கரணம் அடித்தும் சாகசங்களை நிகழ்த்தி காட்டின.

கடற்பகுதியை பாதுகாக்கக்கூடிய போர் கப்பல்கள் போர் ஏற்படும் போது எப்படி செயல்படுவது உள்ளிட்ட சாகசங்களை நிகழ்த்தினர்.

தரைப்படையில் பீரங்கி டேங்குகள் அணிவகுத்து வந்து சாகசங்களை நிகழ்த்தி காட்டின. அதை கண்டு அங்கு குழுமியிருந்த மக்கள் கைதட்டி ஆரவாரத்துடன் கண்டு ரசித்தனர்.

மோடி ராணுவ கண்காட்சிக்கு வருகை தருவதையொட்டி சென்னை விமான நிலையத்தில் இருந்து ராணுவ கண்காட்சி நடைபெறும் திருவிடந்தை பகுதி வரை போலீசார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

மேலும் கிழக்கு கடற்கரை சாலையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டு மாற்றுப்பாதையில் வாகனங்கள் திருப்பி விடப்பட்டன. சுமார் 12 மணியளவில் நிகழ்ச்சி முடிந்து பிரதமர் அங்கிருந்து விடை பெற்றார்.

### சென்னையில் பல்வேறு இடங்களில் கருப்பு கொடி- பலூன்

# கனிமொழி, வைகோ, உள்பட 1350 பேர் கைது

## பிரதமர் மோடியை எதிர்த்து கோஷம்- ஆர்ப்பாட்டம்

சென்னை,ஏப்.12:

**பிரதமர் மோடி வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னையில் பல்வேறு இடங்களில் இன்று கருப்பு கொடி பிடித்தும், கருப்பு பலூன்களை பறக்கவிட்டும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதையொட்டி கனிமொழி,வைகோ, கராத்தே தியாகராஜன் உள்பட 1354 பேர் கைது செய்யப்பட்டனர்.**

காவிரி மேலாண்மை அமைக்காததால் பிரதமர் மோடியின் சென்னை வருகைக்கு பல்வேறு அமைப்பினர் எதிர்ப்பு தெரிவித்து இன்று கருப்பு கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். திமுக, காங்கிரஸ்,மதிமுக, கம்யூனிஸ்ட், மே 17 இயக்கம், தமிழக வாழ்வுரிமை கட்சி, நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் ஆங்காங்கே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அடையார் காந்தி நகரில் கருப்பு கொடியுடன் ஊர்வலமாக செல்ல முயன்ற தென்சென்னை மாவட்ட காங்கிரஸ் தலைவர் கராத்தே தியாகராஜன் உள்ளிட்ட நூற்றுக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர். சைதாப்பேட்டையில் திமுக எம்.பி. கனிமொழி தலைமையில் பிரதமருக்கு கருப்பு கொடி காட்டும் போராட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட கனிமொழி, நடிகர் அருள்நிதி, மாவட்ட செயலாளர் ஜெ.அன்பழகன் எம்எல்ஏ உள்ளிட்ட ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர். அதே போல் மேற்கு சைதாப்பேட்டையில் மா. சுப்பிரமணியன் எம்எல்ஏ தலைமையில் திமுகவினர் கருப்பு கொடியுடன் ஆர்ப்பாட்டம் நடத்தி கருப்பு பலூன்களை பறக்கவிட்டனர். கிண்டியில் தீரன் சின்னமலை சிலை அருகே ஏராளமானோர் கூடி நின்று ராட்சத பலூன்களை பறக்க விட்டனர். மற்றும் கோட்டூர்புரம், கொடுங்கையூர் ரெயில் நிலையம் ஆகிய இடங்களிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சைதை சின்னமலையில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தலைமையில் கருப்பு பலூன்கள் பறக்கவிடப்பட்டன. அங்கு நிறுத்தப்பட்டிருந்த டிரக்கில் வைகோ ஏறி நின்று கருப்பு பலூன்களை பறக்க விட்டனர். இதை தொடர்ந்து வைகோ உள்ளிட்ட மதிமுகவினர் கைது செய்யப்பட்டனர்.

பிரதமர் மோடிக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு கொண்டு ஊர்வலமாக செல்ல முயன்றவர்களை போலீசார் தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

சென்னை முழுவதும் 1163 ஆண்களும், 191 பெண்களும் கைது செய்யப்பட்டதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.



சைதாப்பேட்டையில் பிரதமருக்கு கருப்புக்கொடி காட்ட முயன்று கைது செய்யப்பட்ட திமுக எம்பி கனிமொழியை படத்தில் காணலாம்.

## கிணற்றில் குதித்தவரை காப்பாற்றிய போலீஸ்

சென்னை, ஏப்.12:

சென்னையில் இன்று ஆர்ப்பாட்டம் நடத்த வந்த ஒருவர் திடீரென கிணற்றில் குதித்தார். அவரை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜவகர் காப்பாற்றினார். சூளையைச் சேர்ந்த ஜெயக்குமார் (வயது 44) என்பவர் கிண்டியில் நடைபெறுவதாக இருந்த ஆர்ப் பாட்டத்தில் பங்கேற்பதற்காக வந்து கொண்டிருந்தார். போலீசாரை பார்த்ததும் திடீரென கிணற்றில் குதித்துள்ளார். உடனே புதுவண்ணாரப்பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜவகர் உயிரை துச்சமென மதித்து கிணற்றில் தத்தளித்துக்கொண்டிருந்த ஜெயக் குமாரை காப்பாற்றினார்.

## பூட்டிய வீட்டில் திருட்டு

சென்னை, ஏப். 12:

நீலாங்கரையில் வசித்து வருபவர் நாராயண க்ரூப் (வயது 69). இவர், மத்திய அரசு நிறுவனம் ஒன்றில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். குடும்பத்துடன் கேரளா சென்றுவிட்டு கடந்த 4-ம் தேதி வீடு திரும்பும்போது, வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு 4 சவரன் கொள்ளைபோனது தெரியவந்தது. இந்தநிலையில், கொள்ளையில் தொடர்புடைய குரோம்பேட்டையை சேர்ந்த டேவிட் (வயது 23) என்பவரை போலீசார் கைது செய்தனர்.

### திருச்சி உஷா மரணத்திற்கு காரணம்

# ஆய்வாளர் காமராஜுக்கு கோர்ட் ஜாமீன்

திருச்சி, ஏப்.12:

**திருச்சி போக்குவரத்து காவல் ஆய்வாளர் காமராஜுக்கு ஜாமீன் வழங்கி உயர் நீதிமன்றம் மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.**

திருச்சி, திருவெறும்பூர் பகுதியில் ஹெல்மெட் அணியாமல் இருசக்கர வாகனத்தில் சென்ற ராஜா- உஷா தம்பதியை விரட்டிச் சென்ற காவல் ஆய்வாளர் காமராஜ், இருசக்கர வாகனத்தை எட்டி உதைத்தார். இதில் வண்டியிலிருந்து கீழே விழுந்த உஷா தலையில் அடிபட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அதைத் தொடர்ந்து அவர் மீது வழக்கு தொடரப்பட்டு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதைத்தொடர்ந்து, ஜாமீன் கேட்டு உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் ஆய்வாளர் காமராஜ் சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

அதில், 'கடந்த மார்ச் 7-ம் தேதி திருச்சி - தஞ்சாவூர் சாலையில் துவாக்குடி அருகே வாகன சோதனையின்போது ராஜா என்பவர் தனது மனைவியோடு இரு சக்கர வாகனத்தில் நிற்காமல் சென்றார். அப்போது ராஜாவின் வாகனம் விபத்துக்குள்ளானது. இந்த வாகனத்தை நான் துரத்திச் சென்று விரட்டி மிதித்ததால்தான் விபத்து ஏற்பட்டு உஷா பலியானார் எனத் திருச்சி பாய்லர் பிளாண்ட் போலீஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். ஆனால், அவர் இரு சக்கர வாகனத்தில் முன் பகுதியில் கிரைண்டர் வைத்து ஓட்டிச் சென்றதால்தான் விபத்து ஏற்பட்டது. எனவே, எனக்கும் விபத்துக்கும் தொடர்பில்லை. நான் 35 நாள்களாகச் சிறையில் உள்ளேன். வழக்கு விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவேன். எனவே எனக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிட வேண்டும்'' எனக் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி சுவாமிநாதன் முன் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் வழக்கறிஞர், தொடர்ந்து 35 நாள்களாகச் சிறையில் உள்ளார். புகார்தாரர் விசாரணைக்கு ஒத்துழைக்க மறுக்கிறார் எனக் கூறினார். இதைத் தொடர்ந்து ஆய்வாளர் காமராஜுக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார்.

## இரட்டை இலைக்கு லஞ்சம்: வழக்கு ஒத்திவைப்பு

புதுடெல்லி, ஏப்ரல் 12:

இரட்டை இலை சின்னம் பெற தேர்தல் கமிஷனுக்கு லஞ்சம் கொடுக்க முயன்றதாக டி.டி.வி.தினகரன், அவரது நண்பர் மல்லிகார்ஜுனா, இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகர், நரேஷ், லலித்குமார் ஆகியோர் கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டனர். இதில் சுகேஷ் சந்திரசேகர் தவிர மற்றவர்களுக்கு ஜாமீன் வழங்கப்பட்டது. இந்தநிலையில் டெல்லி சி.பி.ஐ. சிறப்பு கோர்ட்டில் நீதிபதி அரவிந்த்குமார் முன்னிலையிலான அமர்வு முன்பு நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. சுகேஷ் சந்திரசேகர் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அப்போது நீதிபதி அரவிந்த்குமார், இந்த வழக்கின் விசாரணையை அடுத்த மாதம் (மே) 5-ந் தேதிக்கு ஒத்தி வைப்பதாகவும், அதுவரை சுகேஷ் சந்திரசேகரின் நீதிமன்ற காவல் நீட்டிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். மேலும், டெல்லி போலீசார் வழக்கின் ஆதாரங்களை சி.டி.யாக கோர்ட்டில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், அவற்றின் நகல்களை டி.டி.வி. தினகரன் தரப்புக்கும் வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

# தஞ்சை கர்நாடக வங்கி பெயர் தார்பூசி அழிப்பு

தஞ்சாவூர், ஏப்.12:

**காவிரி விவகாரத்தில் தமிழகத்திற்கு தண்ணீர் தர தொடர்ந்து மறுத்து வரும் கர்நாடகத்தைக் கண்டித்து தஞ்சாவூரில் இயங்கி வரும் கர்நாடகா வங்கி அலுவலகத்திற்கு தார் பூசும் போராட்டம் நடைபெற்றது.**

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க தாமதம் செய்துவரும் மத்திய அரசைக் கண்டித்து தமிழகத்தில் தொடர்ந்து போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதனால் தமிழகமே போர்களமாகி உள்ளது. இந்நிலையில், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க தாமதிக்கும் மத்திய அரசைக் கண்டித்தும், தமிழகத்திற்கு தண்ணீர் தரவும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கவும் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வரும் கர்நாடக அரசை எதிர்த்து தஞ்சையில் உள்ள கர்நாடகா வங்கி அலுவலகத்தின் இருந்த பெயர் பலகையில் இருந்த இந்தி எழுத்துக்களை தார் பூசி அழிக்கும் போராட்டம் நடைபெற்றது. இதில், கர்நாடகா வங்கியை முற்றுகையிட்டு பெயர் பலகை மற்றும் கதவுகளில் தார் அடித்து போராட்டத்தில் தமிழ் தேசியக் கட்சியினர் ஈடுபட்டனர்.

## சூரப்பா பதவியேற்பு



சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக சூரப்பா இன்று காலை பொறுப்பேற்று கொண்டார்.


**பேனசானிக் கார்பன் இந்தியா கம்பெனி லிமிடெட்**

(CIN: L29142TN1982PLC009560)

பதிவு அலுவலகம்: 'பொட்டிபட்டி பிளாசா', 3-வது தளம்,
77, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600 034.
போன்: 044-2827 5216/226; Fax: 044-2826 3010
இ-மெயில்: maheswari.p@in.panasonic.com; இணையதளம்: www.panasoniccarbon.co.in

**அறிவிப்பு**

(கம்பெனியின் சமபங்குதாரர்களின் கவனத்திற்கு)

முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (IEPF) சஸ்பென்ஸ் கணக்கிற்கு கம்பெனியின் சமபங்குகளை கட்டாயமாக மாற்றுதல்

கார்ப்பரேட் விவகாரத்துறை அமைச்சகத்தின் (MCA) 07.09.2016 முதல் அமலில் உள்ள 05.09.2016 தேதியிட்ட அறிவிக்கையின்படி முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கியல், தணிக்கை, மாற்றுதல் மற்றும் திருப்பி தருதல்) விதிமுறைகளின் படி ('விதிமுறைகள்') இந்த அறிவிப்பு இதன் மூலம் பிரசுரிக்கப்படுகிறது.

மேற்சொன்ன விதிமுறைகளில் குறிப்பிடப்பட்ட பல்வேறு தேவைகளின்படி, கடந்த 7 ஆண்டுகளாக அல்லது 2010-11 நிதியாண்டிலிருந்து கோரப்படாத டிவிடெண்ட் தொடர்பான பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்களின் சமீபத்தில் பெறப்பட்ட முகவரிகளுக்கு தனித்தனி அறிவிப்புகளை கம்பெனியானது அனுப்பியுள்ளது. இவைகள் மேற்சொன்ன அறிவிக்கையின் படி முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (IEPF) சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்படும்.

மேலும் IEPF சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றுவது தொடர்பான பங்குகள் மற்றும் பங்குதாரர்கள் பற்றிய விவரங்களை கம்பெனியானது அதன் www.panasoniccarbon.co.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது. ரொக்கம் கோரப்படாத டிவிடெண்ட்டுகள் மற்றும் IEPF சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்படுவதற்குதகுதிவாய்ந்த பங்குகள் போன்ற விவரங்களை மேற்குறிப்பிடப்பட்ட இணையதளத்தில் ஆய்வுசெய்து அறிந்துகொள்ளுமாறு பங்குதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

2010-11 நிதியாண்டில் இருந்து டிவிடெண்ட்டுகளை கோராத பங்குதாரர்கள் இது தொடர்பாக ஏதேனும் தகவல் / விளக்கம் தேவைப்பட்டால், அவர்கள் பதிவாளர் மற்றும் கீழே குறிப்பிடப்பட்ட முகவரியைக் கொண்ட பங்குமாற்று ஏஜெண்ட் அல்லது அறிவிப்பின் மேல் பகுதியில் குறிப்பிடப்பட்ட கம்பெனியின் முகவரியில் தொடர்புகொள்ளலாம்.

M/s. கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்,
யூனிட் : பேனசானிக் கார்பன் இந்தியா கம்பெனி லிமிடெட்,
சுப்பிரமணியன் பில்டிங், 5-வது தளம், எண்.1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002.
போன்: 044 - 2846 0390, பேக்ஸ்: 044 - 2846 0129.
இ-மெயில்: investor@cameoindia.com murali@cameoindia.com

அல்லது மேலும் விவரங்களுக்கும் டிவிடெண்ட் கோருவதற்கும் அல்லது கோரப்படாத டிவிடெண்ட்டுகள் தொடர்பாகவும் விவரங்களை அறிய அறிவிப்பின் மேல் பகுதியில் குறிப்பிடப்பட்ட கம்பெனியின் பதிவு அலுவலக முகவரிக்கும் தொடர்புகொள்ளலாம். 30.05.2018 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ மேற்சொன்ன டிவிடெண்டை பங்குதாரர்கள் கோரிப்பெறுவதற்கு தவறினால், 25.06.2018 அன்று IEPF ஆணையத்தின் IEPF சஸ்பென்ஸ் கணக்கில் பங்குதாரர்களின் பெயரில் பதிவு செய்து வரவுவைப்பதற்கு கம்பெனியின் சமபங்குகளை மாற்றி அனுப்புவதற்கான நடவடிக்கைகளை கம்பெனியானது மேற்கொள்ளும். மேற்சொன்ன விதிமுறைகளின்படி IEPF ஆணையத்திற்கு மாற்றி அனுப்பப்பட்ட கோரப்படாத டிவிடெண்ட் தொகை மற்றும் பங்குகள் தொடர்பாக கம்பெனிக்கு எதிராக உரிமைகோரல் எதுவும் மேற்கொள்ள இயலாது என்பதை தயவுசெய்து அறியவும்.

மேற்சொன்ன பங்குகள் மீது ஈட்டப்படும் அனைத்து பலன்கள் ஏதேனும் இருப்பின் அவைகள் உள்ளிட்ட, IEPF ஆணையத்தின் IEPF சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ள கோரப்படாத டிவிடெண்ட் தொகை மற்றும் பங்குகள் ஆகியவற்றை மேற்சொன்ன விதிமுறைகளில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றிய பிறகு IEPF ஆணையத்தில் இருந்து பங்குதாரர்களால் திரும்பக்கோர இயலும் என்பதை பங்குதாரர்கள் தயவுசெய்து அறியவும்.

விதிமுறைகளின்படி IEPF சஸ்பென்ஸ் கணக்கிற்கு பங்குகள் மாற்றப்படும் வகைக்காக கம்பெனியானது ஒரிஜினல் பங்கு சான்றிதழ்களுக்கு பதிலாக டூப்ளிகேட் பங்கு சான்றிதழ்களை வழங்கும் என்பதையும், இதனால் பங்குதாரர்கள் பெயருக்கு பதிவு செய்யப்பட்ட ஒரிஜினல் பங்கு சான்றிதழ்கள் தாமாகவே ரத்தாகிவிடும் என்பதையும், அவைகள் மாற்றத்தக்கதல்ல என்பதையும், IEPF சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்படுவதற்கு தகுதிவாய்ந்த பங்குகள் மற்றும் பிசிக்கல் படிவத்தில் வைத்திருக்கும் பங்குகள் ஆகியவற்றை வைத்திருக்கும் பங்குதாரர்கள் அறியவும். கம்பெனியால் அதன் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள விவரங்களை அறிந்துகொள்ள வேண்டும் என்பதையும், விதிமுறையின்படி IEPF சஸ்பென்ஸ் கணக்கிற்கு பங்குகளை மாற்றும் வகைக்காக கம்பெனியால் வழங்கப்படும் டூப்ளிகேட் பங்குசான்றிதழ்கள் தொடர்பான போதுமான அறிவிப்பாக இவைகள் கருதப்பட வேண்டும் என்பதையும் பங்குதாரர்கள் மேலும் அறிந்துகொள்ளலாம்.

இடம்: சென்னை
தேதி: 07.04.2018

பேனசானிக் கார்பன் இந்தியா கம்பெனி லிமிடெடுக்காக
கம்பெனி செயலாளர்

## SHORT 'N SNAPPY

### CBSE: Una teacher leaked Maths paper

New Delhi, Apr 12 (PTI): The CBSE's Class 10 mathematics question paper was allegedly leaked by a Una-based teacher who was arrested last week for his suspected involvement in the Class 12 economics paper case, the police said today.

Last week, three men- identified as Rakesh Kumar, Amit Sharma and Ashok Kumar - from the DAV Centenary Public School in Una, were arrested by the crime branch after lengthy investigations and questioning.

The Police today said Rakesh Kumar was also found to be involved in the mathematics paper being leaked before the March 28 examination. He confessed during questioning about his alleged involvement, the police claimed. Further details were awaited.

### Justice Chelameswar refuses to list PIL filed by Bhushan

New Delhi, Apr 12 (PTI): The Supreme Court's most senior judge Justice J Chelameswar today once again expressed his anguish over affairs in the apex court and refused to order listing of a PIL filed by former Union Law Minister Shanti Bhushan seeking formulation of guidelines on allocation of cases.

In fast moving developments, advocate Prashant Bhushan, denied urgent listing of his father's PIL, rushed to Chief Justice Dipak Misra's court and mentioned the matter for listing expeditiously. The bench headed by CJI said, 'We will look into it.'

Bhushan initially mentioned the matter before Justice Chelameswar and said this was an emergency situation. He said he was referring the matter to Justice Chelameswar's bench as the PIL challenges the master of roster concept and the CJI can't deal with it. Justice Chelameswar said the reasons were too obvious and he would not like to deal with the matter.

### Saibaba trust fumes over Rahul's tweet

New Delhi, Apr 12: The Shri Saibaba Sansthan Trust Shirdi has slammed Congress president Rahul Gandhi over one of his tweets targeting Union Minister and Bharatiya Janata Party (BJP) leader Piyush Goyal.

Taking a dig at Goyal, Rahul had posted a tweet on Wednesday saying 'there is no limits to the miracles of Shirdi'.

Reacting to it, Shri Saibaba Sansthan Trust Shirdi chairman Dr Suresh Haware took to Twitter terming the Gandhi scion's tweet as painful. He tweeted, 'Rahul ji, dragging Shirdi amid political allegations and counter-allegations is painful. This has hurt the sentiments of Sai devotees in India and abroad. We condemn it on behalf of all Sai devotees. You should apologise to Sai devotees for this insult.'

# Teachers seek training in new curriculum

## ❑ Worried that schedule not yet announced

SANTHOSH MATHEVAN

Chennai, Apr 12: With the closure of schools around the corner after the completion of this academic year's exams, the State Council for Education, Research and Training (SCERT) has not yet announced the schedule for curriculum training for teachers.

*As many as 2.10 lakh teachers are working in the State-run schools. Of these, at least 60 per cent of the teachers would be handling the classes of one, six, nine and 11*

The school education curriculum is undergoing a top-bottom revamp this year, teachers expect a training session from the government before they commence the next academic year.

The annual examinations are on and public exams for class 12 are wrapped up. For class 11 students, who took up public exams, the last working day would be 16 April. The ongoing SSLC exams, too, would get over by 20 April, for whom the summer holidays commence on 21 April.

The last working day for high and higher secondary schools would be 20 April. For elementary and middle schools of the State, the last working day would be 19 April. After this, all teachers would be involved in paper valuation process.

From next year, classes one, six, nine and 11 will have a totally revamped curriculum. In Tamilnadu, there are about 3,100 high schools and 2,900 higher secondary schools being run by various bodies of the State government including School Education Department, local bodies and welfare departments. Likewise, there are almost a 6,500 elementary schools in the State run by the Directorate of Elementary Education. As many as 2.10 lakh teachers are working in these State-run schools. Of these, at least 60 per cent of the teachers would be handling the classes of one, six, nine and 11.

However, the teachers are still not given any notification regarding training session from the School Education Department or SCERT. So, confusion prevails among teachers to plan for their vacation. 'Usually, SCERT or the School Education Department would notify about the training before mid-March. But, this year, we still have not received information,' said Karunakaran Ramaswamy, a teacher working in a government school in the city.

'I am handling Biology for class six. So, we will have to know how the new curriculum is going to be. Without knowing even a part of it, how can we face the students in June?' he asks.

Another higher secondary teacher, on condition of anonymity, said, 'Usually, we will be planning our vacation in May. Even this year, we have the same plan. Also, this year, the school closes by 20 April after which we will be having only 10 days during which paper valuation and training have to happen. If there is clarity in the training schedule of the SCERT, we can have clarity in our plan, too, and make necessary plans.'

She also said the new syllabus is expected to be of high standards and complexity and so a definite training would be necessary for teachers before the commencement of the next academic year.

## (from Page 1)

### ISRO on cloud nine...

position information, combining applications like locating fishermen, and during times of disaster. Some of the possible applications have already been rolled out,' he added.

The launch of the IRNSS 1I comes two weeks after ISRO lost contact with GSAT 6A satellite. The IRNSS-1I is the eighth satellite to join ISRO's NavIC navigation satellite constellation. IRNSS-1I is a replacement in the NavIC constellation for the 1,425kg IRNSS-1H, whose launch was unsuccessful. The mission is the 43rd flight of the PSLV rocket and the 20th flight of the PSLV-XL version.

**New modification**

Sivan said that a new technology of friction steel welding has been used in the phase 2 tank of the PSLV- C41. 'This will give more welding efficiency and take more load and pressure. This technology will be used in all the upcoming missions,' he said.

**Nine in eight**

Talking about the future plans of ISRO, Sivan said that a lot more missions on the anvil. 'In the next eight months, we are going to have nine missions. We are going to have GSAT, PSLV missions. Towards the end of the year we have the major mission - Chandryaan-2,' he said.

### Black flags across...

expected to raise at the end of the day. Senior leaders like Vaiko of MDMK spearheaded protest at Little Mount, Rajya Sabha MP Kanimozhi at Saidapet, Seeman of Naam Tamizhar Katchi at Guindy and Velmurugan of Thamizhar Vazhvurimai Katchi at Alandur.

The DMK released a picture of its president M Karunanidhi with a black shirt, while blag flags were hoisted at the residences of DMK leaders and at the DMK headquarters. The party's working president M K Stalin, who was in Cauvery Rights Retrieval Rally, was also wearing black shirt.

## SC refuses urgent hearing on *Nanak Shah Fakir*

New Delhi, Apr 12 (PTI): The Supreme Court today refused to accord an urgent hearing on the Shiromani Gurdwara Parbandhak's Committee (SGPC) plea, seeking modification of the order allowing the movie *Nanak Shah Fakir* to be released in theatres across India.

A bench headed by Chief Justice Dipak Misra considered the submission of the SGPC's counsel that nobody should be allowed to portray the life of Sikh gurus, their families and the 'punj pyara' on screen .

The bench, also comprising Justices A M Khanwilkar and D Y Chandrachud, said once a film has been granted certification by the Central Board of Film Certification (CBFC), its release can only be stalled through lawful means.

The bench did not agree to the submission of Satender Singh Gulati, counsel for SGPC, that the interim plea be heard either today or tomorrow as the film releases in the theatres on Friday. The bench said the plea will be listed for hearing on Monday.

# Reusable launch vehicle to be tested on land

## ❑ ISRO planning to have series of demonstrations

BALASUBRAMANI MUNIYANDI

Sriharikota, Apr 12: Vikram Sarabhai Space Centre (VSSC), Director, S Somanath said that the next phase of the reusable launch vehicle project of the ISRO will be the ground landing test.

Addressing mediapersons after the launch of the PSLV- C 41 today, Somanath said that the space agency is planning to have the next level of demonstrations including a series of tests at the earliest.

'During the previous demonstration we landed the RLV TD on a defined landing spot over Bay of Bengal. In the next phase we will try landing it on wheel,' he said. He further said that they will also be validating the various methods and softwares used.

'After the previous demonstrations we will try putting the RLV in various orbits and perform experiments to get datas and will try landing it on a strip,' he said.

He added that the first part of the mission is progressing with the available resources and the second phase will be undertaken after the government approval.

**Objectives of RLV-TD**

- Hypersonic aero thermodynamic characterisation of wing body
- Evaluation of autonomous Navigation, Guidance and Control (NGC) schemes
- Integrated flight management
- Thermal Protection System Evaluation

It may be noted that on 23 May 2016 ISRO successfully flight tested India's first winged body aerospace vehicle operating in hypersonic flight regime.

In this experimental mission, the HS9 solid rocket booster carrying RLV-TD lifted off from the First Launch Pad at Satish Dhawan Space Centre, Sriharikota.

After a successful flight of 91.1second, HS9 burn out occurred, following which both HS9 and RLV-TD mounted on its top coasted to a height of about 56 km. At that height, RLV-TD separated from HS9 booster and further ascended to a height of about 65km.

From that peak altitude of 65 km, RLV-TD began its descent followed by atmospheric re-entry at around Mach 5 (five times the speed of sound). The vehicle's Navigation, Guidance and Control system accurately steered the vehicle during this phase for safe descent. After successfully surviving a high temperatures of re-entry with the help of its Thermal Protection System (TPS), RLV-TD successfully glided down to the defined landing spot over Bay of Bengal, at a distance of about 450 km from Sriharikota, thereby fulfilling its mission objectives. The vehicle was successfully tracked during its flight from ground stations at Sriharikota and a shipborne terminal. Total flight duration from launch to landing of this mission of the delta winged RLV-TD, lasted for about 770 seconds.

In this flight, critical technologies such as autonomous navigation, guidance & control, reusable thermal protection system and re-entry mission management have been successfully validated.




*RLV TD during its first test flight on 23 May 2016 from Satish Dhawan Space Centre, Sriharikota.*

# Sri Reddy turns guns on Rana Dagubatti's brother

## ❑ Women associations express support to actress

Hyderabad, Apr 12: Actress Sri Reddy, who protested against casting couch by stripping in front of the Movie Artistes Association office, alleged that producer Suresh Babu's son and Rana Dagubatti's brother Abhiram had sexually exploited her in a studio. Meanwhile several women's organisation have come forward and expressed their support for Sri Reddy.

In a recent revelation, Sri Reddy, claimed, 'Suresh Babu's son cheated me so badly. The studio belongs to the government and it is meant to help and support talented people. They have to use it in a proper way. This Suresh Babu's son took me to the studio and behaved with me so badly.'



Suresh Babu is father of Rana and Abhiram Daggubati. While Sri Reddy initially did not reveal who she was accusing, just hours later she appeared on a Telugu news show and alleged that it was Abhiram who had exploited her. It was in this interview that intimate pictures of Abhiram and herself were flashed.

Sri Reddy had earlier claimed that many producers, directors and actors had asked her for sexual favours, and even upon having submitted to such requests she did not get an opportunity.

Meanwhile, a high-level committee with adequate women members should probe complaints of sexual harassment raised by female artistes of Telugu film industry, Women's Joint Action Committee, an umbrella organisation of 10 women's rights outfits demanded.

The committee should have women bureaucrats, police officers and representatives of women's rights groups. Telugu Film Chamber of Commerce, MAA and AP Film Federation should take measures to make work places free of sexual harassment, the women's rights activists demanded.

# Rahul Aware wins gold, Babita silver

## ❑ India gets more medals in wrestling

Gold Coast, Apr 12 (PTI): India's Rahul Aware won the gold medal today in men's freestyle 57kg wrestling by defeating Canada's Steven Takahashi in the final bout at the ongoing Commonwealth

**Today's winners**

**Rahul Aware (57kg) Wrestling - Gold**
**Babita (53kg) Wrestling - Silver**
**Tejaswini Sawant - 50m rifle prone - Silver**

Games 2018 in Gold Coast, Australia. This is India's 13th gold medal at the 21st CWG and 27th medal overall.

Meanwhile, defending champion Babita (53kg) settled for a silver medal at the Commonwealth Games after being out-manoeuvred by Canada's Diana Weicker in the summit clash here today. Babita, who claimed a silver in the 2010 edition before a gold in Glasgow, failed to break through her rival's defences, going down 2-5 in the contest. Her medal opened India's account in the wrestling competition of the Games.



Rahul Aware

Earlier, Tejaswini Sawant won silver in the finals of the women's 50m rifle prone, finishing behind Singapore's Martina Lindsay Veloso. This is the sixth CWG medal for 37-year-old Sawant, following two golds in 2006 and a pair of silvers and a bronze in 2010. Anjum Moudgil, the other Indian to reach the women's 50m rifle prone finals, finished 16th.

In the 20-member finals, Sawant shot series of 102.1, 102.4, 103.3, 102.8, 103.7 and 104.7 for a total of 618.9. Winning gold was Veloso with a Games record total of 621, and bronze was claimed by Scotland's Seonaid McIntosh who tallied 618.1.

For Arjuna awardee Sawant, who in 2010 became the first Indian sportswoman to win gold at the World Shooting Championship, today's medal will put in the shade her disappointing showing at the 2016 Rio Olympics.

**PANASONIC CARBON INDIA CO. LIMITED**
(CIN: L29142TN1982PLC009560)
Regd Office: Pottipati Plaza, 3rd Floor,
77, Nungambakkam High Road, Nungambakkam, Chennai 600034
Tel: 044-28275216, 044-28275226, Fax: 044-28263010
Web: www.panasoniccarbon.co.in

**NOTICE**

(For the attention of Equity Shareholders of the Company)
Mandatory transfer of Equity Shares of the Company to Investor Education and Protection Fund (IEPF) Suspense Account

Notice is hereby published pursuant to the Provisions of the Investor Education and Protection Fund Authority (Accounting, Audit, Transfer and Refund) Rules ("the Rules") notified by the Ministry of Corporate Affairs (MCA) vide notification dated September 5,2016 with effect from September 7,2016.

In accordance with the various requirements as set out in the Rules, the Company has sent Individual notices to the latest available addresses of the concerned Shareholders whose shares in respect of which Dividend has not been claimed for seven consecutive years or more from 2010-11 shall be transferred to the Investor Education and Protection Fund (IEPF) suspense Account as per the said notification.

The Company has also uploaded the details of such Shareholders and Shares due to transfer to IEPF Suspense Account on its Company website:www.panasoniccarbon.co.in. The Shareholders are requested to refer to the abovesaid weblink to verify the details of the un-encashed Dividends and the Shares liable to be transferred to IEPF Suspense Account.

Shareholders who have not claimed their Dividends from the year 2010-11 and for any communication/clarification, you may contact the Registrar & Share Transfer Agent to the following address or Company Address mentioned in the top of the notice:

M/s. Cameo Corporate Services Limited
Unit: Panasonic carbon India Co. Limited,
Subramanian Building, 5th Floor
No.1, Club House Road, Chennai - 600 002
Phone: 044 - 28460390, Fax: 044 - 28460129
e-mail: investor@cameoindia.com murali@cameoindia.com

or at the Registered office of the Company Address mentioned in top of the notice for further details and for making a valid claim or the unclaimed Dividends. In case the Concerned Shareholders fail to claim the above said Dividend on or before 30th May 2018 the Company will proceed to transfer the underlying Equity Shares of the Company, registered in the name of the Shareholder to the credit of the IEPF Suspense Account of IEPF Authority by 25th August, 2018. Please note that, no claim shall be lie against the Company in respect of unclaimed Dividend amount and Shares transferred to IEPF pursuant to the said rules.

Shareholders may please note that both the unclaimed Dividend and the Shares transferred to IEPF Suspense Account of IEPF Authority including all benefits accruing on such Shares, if any, can be claimed back by them from the IEPF Authority after following the procedure as set out in the Rules.

The concerned Shareholders, holding Shares in physical form and whose Shares are liable to be transferred to IEPF Suspense Account, may note that the Company would be issuing duplicate Share Certificate (s) in lieu of the Original Share Certificate (s) held by them for the purpose of transfer of Shares to IEPF Suspense Account as per Rules and upon such issue, the Original Share Certificate (s) which stand registered in their name will stand automatically cancelled and be deemed non-negotiable. The Shareholders may further note that the details uploaded by the Company on its website should be regarded and shall be deemed to be adequate notice in respect of issue of the duplicate share certificate (s) by the Company for the purpose of transfer of Shares to IEPF Suspense Account pursuant to the Rules.

For Panasonic Carbon India Co. Limited
COMPANY SECRETARY

Place: Chennai
Date : 07/04/2017